## அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அதனைத்தொடர்ந்த செயற்பாடு தொடர்பிலான ஆரம்ப கரிசனைகள்

8 சனவரி 2015 தொடக்கம் 16 நவம்பர் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அரசியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புலனாய்வு செய்வதற்கான விசாரணை ஆணைக்குழுவின், இவ் வாரம் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட, அறிக்கை தொடர்பிலும் அதனைத் தொடர்ந்து அதனுடைய கண்டறிதல்களை அடிப்படையாகக் கொண்டு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினைத் தாபித்தமை தொடர்பிலும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மிகவும் அல்லலடைகிறது. விசாரணை ஆணைக்குழுவினுடைய அறிக்கை தொடர்பான கரிசனைகளை எழுப்புகின்ற கருத்துரை ஒன்றினை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் விரைவில் வெளியிடும். எனினும் ஆரம்பக் கருத்தாக, விசாரணை ஆணைக்குழுவினுடைய அறிக்கையின் கண்டறிதல்கள் இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனத் தன்மை, சட்டவாட்சி, சனநாயகம் மீதான தாக்கம் பற்றி தீர்க்கமான கரிசனைகளை எழுப்புகின்றது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் குறித்துரைக்கின்றது.

தாமதப்படுத்துகின்ற உத்தியாக விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவது பற்றியும் இலங்கையின் கடந்த கால துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் பேற்றினைத் தீர்ப்பதிலும் அதனுடைய செயற்றிறனற்றதன்மை பற்றியும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் முன்னரும் கரிசனைகளைத் தெரிவித்துள்ளது. 2157/44 இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சனவரி 9ஆம் திகதி அன்று விசாரணை ஆணைக்குழு தாபிக்கப்பட்டதோடு, 22 சனவரி 2021 தேதியிடப்பட்ட 2159/16 இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அதனுடைய ஆணையினை திருத்தியதன் மூலமாக அதனைத்தொடர்ந்த பரந்துபட்ட அதிகாரங்களும் வழங்கப்பட்டது. இந்த மேலதிக அதிகாரங்களைக் கேள்விக்குட்படுத்தி மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும் அதனுடைய நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும் அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் ஒன்றினைத் தாக்கல் செய்தனர். ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் புலனாய்வு விசாரணைகளையும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் அல்லது சனாதிபதி ஆணைக்குழுவின் ஆணைக்காலத்தின் போது ஆரம்பிக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் விசாரணை ஆணைக்குழு தலையீடுசெய்வதற்கும் தப்பான முன் அபிப்பிராயம் ஏற்படுத்தவும் இப் பரந்துபட்ட அதிகாரங்கள் வலுவூட்டும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தற்போது கரிசனை கொள்கிறது. தாபிக்கப்பட்டதிலிருந்து சனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் புலனாய்வு விசாரணைகளிலும் சட்ட நடவடிக்கைகளிலும் தலையீடு செய்வதற்கு எத்தனித்து வருவதோடு, இயற்கை நீதிக் கோட்பாடுகளை கவனத்திலெடுக்காததினாலும் ஏற்கனவேயுள்ள பரந்துபட்ட அதிகாரத்தினையும் விஞ்சி செயலாற்றுவதனாலும் இது விசாரணைகளைக் கையாளுகின்ற விதமும் விமர்சிக்கப்பட்டுவருகின்றது.

ஆணைக்குழுவினுடைய அறிக்கை சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, இவ் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கென விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 29 சனவரி 2021 அன்று அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இல. 2212/53 இன் கீழ் உருவாக்கப்பட்டது. இவ் ஆணைக்குழுவிற்கு¸ ஏனைய பிற விடயங்களுடன், விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளினை அமுல்படுத்துகின்ற போது நிலைநாட்டப்பட்டுள்ள நீதிமுறை நிறுவனங்களினையும் பொறிமுறைகளையும் தவிர்க்கின்ற மாற்றுவழிப்பாதையினுடைய விளைவினையுடைய அரசியல் பழிவாங்கல் தொடர்பில் நபரொருவர் குற்றவாளியாக அடையாளம் காணப்படுகின்ற போது அந் நபரின் மீது குடியியல் இயலாமையினை விதிக்குமாறு பரிந்துரைப்பதற்கும் வலுவூட்டப்பட்டுள்ளது.

விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளினை அமுல்படுத்துவது நீதித்துறையின் சுயாதீனத்தன்மையினையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளின் சுயாதீனத்தன்மையினையும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் ஊழல் விடயங்கள் தொடர்பில் விசாரணைகளையும் ஆரம்பகட்ட சட்ட நடபடிக்கைகளை முன்னெடுத்த புலனாய்வு அதிகாரிகளையும் சீர்குலைப்பதாக அமையலாம் என்ற தீர்க்கமான கரிசணையினை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பக்கருத்தாகக் கொண்டுள்ளது. இவ்வாறான செயல்கள் அரசியல் ரீதியில் கூருணர்வுடைய வழக்குகள் மீது எதிர்காலத்தில் கணிசமாக தாக்கத்தினை ஏற்படுத்துவதோடு இலங்கையிலுள்ள விடுபாட்டுரிமை சூழ்நிலையினை மேலும் திடமடையச்செய்யும்.

அரசியல் நோக்கங்களுக்காக குற்றவியல் நீதிப் பொறிமுறையினைத் துஷ்பிரயோகம் செய்வது, கட்டமைப்பு பிரச்சனை என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அறிந்துள்ளது. எவ்வாறிருப்பினும், இவ் ஆணைக்குழு மற்றும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு போன்றன இதற்கான தீர்வல்ல, மாறாக இப் பிரச்சனையினை மேலும் மோசமானதாக்கும். அனைத்து குடிமக்களுக்கும் சமமான சட்டப் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்த இந்த நிறுவனங்களுள் உறுதியான ஒழுக்கநெறி தராதரங்களுடன் கூடிய சுயாதீனமான, பக்கச்சார்பற்ற புலனாய்வுகளையும் வழக்குத் தொடருதலையும் இயலச்செய்வதற்கு வலுவுள்ள கட்டமைப்புக்கள் அவசியம். இவ் விடயம் தொடர்பில், கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தத்திற்கான தேவையினையும், அரசியல் பழிவாங்கலுக்கு தான் உள்ளாக்கப்படுகின்றார் எனக் கோருகின்ற எவரேனும் நபரொருவர் நடைமுறையிலுள்ள நீதிப்பொறிமுறையினுள் சட்டப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ளவதற்கான வளத்துணையின் தேவையினையும் அடிக்கோடிட்டுக்காட்டுகின்றது.

மேலும், விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு நீதிமன்ற நடவடிக்கைகளை சீர்குலைக்ககூடியுதும், இலங்கையில் பொறுப்புக்கூறலினையும் வெளிப்படைத்தன்மையினையும் வலுப்படுத்துவதற்காகவும் சட்டவாட்சியினை நிலைநிறுத்துவதற்காகவும் வழக்குகள் தொடர்பில் பணியாற்றிய நபர்களையும் நிறுவனங்களையும் இலக்கு வைக்கின்ற அபாயகரமான

போக்கினை உருவாக்கக்கூடியதுமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கரிசணை கொள்கின்றது. ஆதலால், இலங்கையில் சட்டவாட்சியினையும், சனநாயகத்தினையும் மதிக்கின்ற அரசியற் கட்சிகளையும் மதத் தலைவர்களையும், சிவில் சமூகத்தினையும், மற்றும் அனைத்து குடிமக்களையும் விசாரணை ஆணைக்குழுவின் கண்டறிதல்களை நுணுக்கமாக மதிப்பீடு செய்யுமாறும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினைக் கேள்விக்குட்படுத்துமாறும் வேண்டுகின்றது. கடந்த காலங்களில் கண்ணுற்றது போல அரசியல் எதிராளிகளைக் குறிவைக்கவும், பல சந்தர்ப்பங்களில் குடியியல் இயலாமையினைக் பிரயோகிக்கவுமே எப்போதும் பயன்படுத்தப்பட்டுவந்துள்ள 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தினை நீக்குமாறும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கோருகின்றது. இத்தகைய நடவடிக்கைகளை எதிர்ப்பதில் காணப்படுகின்ற மந்தப்போக்கும், விருப்பமற்ற தன்மையும் சர்வாதிகார ஆட்சியினை திடப்படுத்துவதுடன் இலங்கையின் நலிவுற்ற சனநாயகத்திற்கு முன்னெப்போதும் முகங்கொடுக்காத சவால்களை உருவாக்குகின்ற போக்கினையும் உருவாக்கும்.